செ.வெ.எண்:20 நாள்:11.01.2018

# செய்திக் குறிப்பு

## விவசாயிகள் குறை கேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம்

ஜனவரி 2018 ஆம் மாத விவசாயிகள் குறை கேட்பு மற்றும் ஆலோசனைக் கூட்டம் வரும் 19.01.2018 வெள்ளிக் கிழமையன்று **புதிய மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தின் தரைத்தளத்தில் உள்ள பொதுமக்கள் குறைதீர்வு அரங்கம் எண்.115-ல்** மாவட்ட ஆட்சியர் தலைமையில் காலை 10.30 மணியளவில் நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

கடலூர் மாவட்ட விவசாயிகள், தங்களது வேளாண்மை சார்ந்த குறைகளை கோரிக்கைகளாக வைக்க வாய்ப்பு வழங்கப்படும். கூட்ட அரங்கில் தங்களது கோரிக்கைகளை தெரிவிக்க விரும்பும் விவசாயிகள் காலை 8.00 மணி முதல் 10.15 மணிக்குள் தங்களது பெயர், கோரிக்கை விவரம் மற்றும் கோரிக்கை வைக்கவுள்ள துறையின் பெயர் ஆகியவற்றை பதிவு செய்து கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விவசாயிகள் தங்களது கோரிக்கைகளை மனுவாகவும் வழங்கலாம். இக்குறைகளுக்கு சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்கள் உரிய பதில் அளிக்கவும் மேலும் தொடர் நடவடிக்கை எடுக்கவும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்படவுள்ளது.

இவ்வாய்ப்பை கடலூர் மாவட்ட விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

ஒம்/-பிரசாந்த் மு.வடநேரே
மாவட்ட ஆட்சித்தலைவர்,
கடலூர்.

//உ.ந.உ.ப.//

11/1/18
மாவட்ட ஆட்சித்தலைவருக்காக

வெளியீடு:- செ.ம.தொ.அ.கடலூர்.